குறித்த காலத்துக்குத் தரிசனம்
இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது;
முடிவிலே அது விளங்கும்.
அது பொய் சொல்லாது;
அது தாமதித்தாலும் அதற்குக்
காத்திரு; அது நிச்சயமாய் வரும்,
அது தாமதிப்பதில்லை. ஆபகூக் 2:3



# நிறைவேறிய தீர்க்கதரிசனம்

என் பெயர் மெலின்டா சார்லெட். என்னுடைய சிறுவயதில் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களுடைய கூட்டம் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடியில் நடைபெறும் பொழுதெல்லாம் என் அம்மா என்னையும் உடன் அழைத்துச் செல்வார்கள். கூட்டம் முடிந்து இறுதியில் அங்கிளை சந்தித்து ஜெபிக்க செல்வோம். அங்கிள் என் தலையில் கை வைத்து ஜெபித்து விட்டு நீ ஒரு டாக்டர் ஆவாய் என்றார்கள். அவ்வாறு வெவ்வேறு சூழ்நிலைகளில் இரண்டு கூட்டங்களில் நான் கலந்துக்கொண்டு ஜெபித்தப்பொழுது அவ்வாறே சொன்னார்கள். சிறு வயதில் என்னிடம் கேட்பவர்களிடம் நான் கம்ப்யூட்டர் இன்ஜினியர் ஆவேன் என்று தான் சொல்வேன். ஆனால் அங்கிள் ஜெபித்து கூறியப் பொழுது என்னுடைய ambition-ஐ நான் மாற்றிக்கொண்டு அனைவரிடமும் நான் டாக்டர் ஆவேன் என்றே சொல்ல ஆரம்பித்தேன்.

11-ம் வகுப்பில் சேரும்பொழுது என் அம்மாவிடம் சொன்னேன். அங்கிள் சொன்னபடி நான் டாக்டர் ஆவதற்கு Biology group எடுக்கிறேன் என்றேன். அப்பொழுது என் அம்மா சொன்னார்கள். நீ Computer Science எடுத்து படி. அதன்பின் நீ Ph.D. எல்லாம் படித்து முடித்துகூட டாக்டர் ஆகலாம் என்றார்கள். நானும் மகிழ்ச்சியுடன் படிக்க ஆரம்பித்தேன். தேவ கிருபையால் 12-ம் வகுப்பில் 97 % எடுத்து School Top list-ல் வந்தேன். அதன்பின் B.Tech. முடித்து ஒரு Infosys company-ல் வேலைக்கு சேர்ந்தேன். பிறகு திருமணம் நடைபெற்றது. நல்ல கணவர், இரண்டு குழந்தைகள். இந்த நிலையில் ஒரு நாள், கர்த்தாவே உங்களுடைய சித்தம் ஒன்றே ஏற்ற நேரத்தில் என் வாழ்வில் நடைபெறட்டும் என ஜெபித்தேன். அதன்பின் Bachelor of Theology படிக்கவும், தொடர்ந்து Master of Divinity படிக்கவும் கர்த்தர் உதவி செய்தார். தொடர்ந்து Asian Theological Universityல் Doctor of Ministry முடித்து டாக்டர் பட்டம் பெற்றேன். சிறுவயதில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் மூலம் நான் பெற்றுக்கொண்ட தீர்க்கதரிசனம் என்னுடைய 28-ம் வயதில் நிறைவேறும்படி கர்த்தர் தாமே உதவி செய்தார். அதற்காக கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். தற்பொழுது தொலைக்காட்சி மூலமாகவும், திருச்சபை மூலமாகவும் குடும்பமாக ஊழியம் செய்து வருகிறோம். அங்கிள் அவர்களுக்கும் எங்களுடைய நன்றியைத் தெரிவிக்கிறோம்.

**Rev. Dr. மெலின்டா சார்லெட், அரக்கோணம்.**


திருச்சியில்

## திருமணம் மற்றும் வேலை வாய்ப்பிற்கான ஆலோசனை கருத்தரங்கு

ஆகஸ்ட் 15 திங்கட்கிழமை (அரசு விடுமுறை)

இடம்
அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
தில்லை நகர், திருச்சி.

நேரம்
காலை 9.30 மணி முதல்
மதியம் 1.30 மணி வரை

ஆலோசனை & ஜெபம்: Rev.Dr.A. ஜாஷ்வா

- பரவசமூட்டும் ஆராதனை
- பயனுள்ள ஆலோசனைகள்
- மனம் திறந்து கலந்துரையாடல்
- எதிர்காலத்தைக் குறித்த விழிப்புணர்வு
- தன்னம்பிக்கையை வளர்த்தல்
- சாதிக்க துடிப்பவர்களுக்கு சத்தான அருளுரைகள்

17 வயது முதல் திருமணம்
ஆகாத ஆண் / பெண் இருபாலரும்
கலந்து கொள்ளலாம்

பதிவுக் கட்டணம் – ரூ. 100/- மட்டுமே
மதிய உணவு, தேநீர் வழங்கப்படும்

மேலும் விபரங்கள் அறிய : 73585 66066
What's app : 99446 66066

மதுரையில்

## பங்காளர்களுக்கான ஆசீர்வாதக் கூட்டம்

ஆகஸ்ட் 31
புதன்கிழமை
(அரசு விடுமுறை)

இடம்: மாஸ் ஹால்
ஹோட்டல் ஜான்ஸ் (PRT)
ஆம்னி பேருந்து நிலையம் எதிரில்,
மாட்டுத்தாவணி, மதுரை.

நேரம் :
காலை 9.30 மணி
முதல் 1.00 மணி வரை



சிறப்புச் செய்தியாளர்கள்
Rev.Dr.A. ஜாஷ்வா
Dr. ஜேன் ஜாஷ்வா

மேலும் தொடர்புக்கு: (0431) 2765386 செல்: 94888 45627



# அன்பரின் ஊழியம்

மலர்: 8 ◆ ஆகஸ்ட் 2022 ◆ இதழ் 8

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே,

விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிற வருமாகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்!

அன்பரின் ஊழியம் மாதாந்திர பத்திரிக்கை அநேகருக்கு ஆசீர்வாதமாக இருப்பதற்காக கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். இந்த மாதமும் உங்களுக்கு ஆசீர்வாதமான செய்தி களை கொடுத்திருக்கிறோம். பங்காளர்கள் வாழ்வில் கர்த்தர் செய்த நன்மைகள் அனைத்தும் துதி அறிக்கையில் நீங்கள் படித்து அறிந்துக் கொள்ளலாம்.

ஒரு வேளை உங்கள் வாழ்க்கையிலும் கர்த்தரிடமிருந்து வரவேண்டிய நன்மைகளை பெற முடியாமல் இருந்தால் பொருத்தனையோடு ஜெபியுங்கள். நாங்களும் உங்களுக்காக பாரத்துடன் ஜெபிக்கிறோம். கர்த்தர் அதிசயங் களை காணச்செய்வார்.

**நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள். - 2 நாளாகமம் 20:17**

நம்முடைய வாழ்க்கையில் அநேக சமயங்களில் நம்முடைய கட்டுபாட்டை தாண்டி சில காரியங்கள் நடக்கிறது. அவற்றைப் பார்த்து நாம் கர்த்தரிடம் ஏன் இப்படி நடந்தது என கேட்டுக் கொண்டிருக்கிறோம். கர்த்தர் நம்மைப் பார்த்து, **"என் சமூகத்தில் தரித்து நில், பெரிய காரியங் களை பார்ப்பாய்"** என்று சொல்கிறார். ஆகவே **உங்கள் முன் இருக்கிற போராட்டங்களைக் கண்டு, பிரச்சனைகளைப் பார்த்து, பயப் படாதீர்கள். கர்த்தருடைய சமூகத்தில் தரித்திருக்கும் பொழுது, கர்த்தருடைய வல்லமை உங்கள் வாழ்வில் பெரிதாய் விளங்கும். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் செய்வார்.**

- ஜூன் மாதத்தில் நடைபெற்ற எல்லாக் கூட்டங் களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். கூட்டங் களை நடத்துவதற்கு கர்த்தர் மீண்டுமாய் திறந்த வாசலை தந்திருக்கிறார். அதற்காக கர்த்தரை துதிக்கிறோம்.
- உங்கள் பகுதிகளிலும் அன்பரின் ஊழியம் சார்பாக ஆசீர்வாதக் கூட்டங்கள், நற்செய்தி பெருவிழாக்களை நடத்த வாஞ்சையுள்ள மக்கள் எங்களை தொடர்புக் கொள்ளுங்கள்.

ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |

அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: **(0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605** (24 மணி நேரமும்)

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

ஏனென்றால் **கூட்டங்கள் வாயிலாக அநேக மக்கள் சுவிசேஷத்தை அறிந்துக் கொள்கின்றனர். எங்களோடு இணைந்து நீங்களும் ஆத்தும ஆதாயம் செய்யுங்கள்.**

- தொலைக்காட்சி ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். தொலைக்காட்சி ஊழியத்தின் மூலம் அநேக மக்கள் நன்மைகளை பெற்று வருகின்றனர். **தற்பொழுது தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மூன்று மொழிகளில் அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சிகள் வெளிவருகிறது. இன்னும் ஏராளமான மொழிகளில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வெளிவர ஜெபியுங்கள். உற்சாகமாய் தாங்குங்கள்.**
- **S.J.Saves Trust** மூலம் நாம் ஏராளமான பிள்ளைகளை அன்போடு போஷித்து வருகிறோம். கர்த்தர் தாமே தொடர்ந்து நடத்தி வருகிறார்.
- **S.J.S.T.** மருத்துவமனையின் வளர்ச்சிக்காகவும், அதன் தேவைகள் சந்திக்கப்படவும் ஊக்கமாய் ஜெபியுங்கள்.
- சமூக வலைதளங்கள் வாயிலாக வருகிற அனைத்து செய்திகளையும், சிறப்பு பாடல்களையும் பாருங்கள். உங்கள் நண்பர்களுக்கும் **share** செய்யுங்கள். எங்கும் கர்த்தருடைய நாமம் ஒன்றே மகிமைப்படுவதாக!
- ஊழியத்தில் வாஞ்சையுள்ள பிள்ளைகளுக்கான வேலை வாய்ப்பு தகவல்கள் அனைத்தையும் இந்த பத்திரிக்கையின் 23-ஆம் பக்கத்தில் பார்த்து அறிந்து கொள்ளலாம்.

எங்கள் அப்பா, அம்மா இருவரின் நல்ல சுகத்திற்காகவும், எங்களுடைய நல்ல சவுக்கியத்திற்காகவும், ஊழியத்திற்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

எங்களை தனியே சந்தித்து ஜெபிக்க விரும்புகிறவர்கள் இந்த (94888 45627) எண்ணிற்கு தொடர்புக் கொண்டு முன்அனுமதி பெற்று வாருங்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
Dr. **ஜேன் ஜாஷ்வா**

## இம்மாத வாக்குத்தத்தம்

**நீதிமொழிகள் 28:20a**
**சங்கீதம் 85:1; ஆகாய் 2:19b**
**ரோமர் 8:9**

## இதயம் தொட்ட எண்ணம்

**பரிசுத்த ஆவியின் வல்லமையை அமைதியாக கவனிக்கும் பார்வையாளர்களாய் அல்ல,
பகிரங்கமாக வெளிப்படுத்தும் பிரதிநிதிகளாய் இருங்கள்!**

**Be ambassadors that openly demonstrate the mighty power of the Holy Spirit not just mute spectators!**

## ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

**State Bank of India, Cantonment, Trichy Main Branch**
**IFS Code : SBIN 0000930**

மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 95004 87061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code - ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 95004 87061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.

## எமது You Tube சேனல்களை Subscribe செய்யவும்



Ministry of Jesus - Dr. Ananda Stira



Dr Jane Joshua

My Deliverance Church

## எமது முகநூல் பக்கங்கள் (Face book)

Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in

Ananda Stira @dranandastira

Margretstira

Jane Joshua @DrJaneJoshua

My Deliverance Church @mydeliverance.church

Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesrajstira

ministryofjesus.in

drjane15

## கன்னியாகுமரி மற்றும் சென்னை பகுதியிலுள்ள அன்பரின் ஊழியப் பங்காளர்கள் கவனத்திற்கு

நமது அன்பரின் ஊழியப் பிரதிநிதிகளாக கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் எனவே உங்கள் ஜெப வேண்டுதல்களை அவர்களிடம் கூறி ஜெபித்துக் கொள்ளலாம். மேலும், நமது ஊழிய விபரங்களையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

கன்னியாகுமரி : 82203 17472
சென்னை : 77081 53666



# செய்யப்படாத அதிசயங்கள்
# (Unprecedented Wonders)

தேவ செய்தி : Rev.Dr. A. ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான தேவ பிள்ளைகளே,

நம் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களை அன்போடு வாழ்த்துகிறேன். சென்ற மாதம் முழுவதும் உங்களை பாதுகாத்த தேவன் இப்புதிய மாதத்திலும் உங்களோடேகூட இருந்து வழிநடத்துவாராக. இந்த மாதத்திலும் தேவனுடைய வார்த்தையை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். **"செய்யப்படாத அதிசயங்கள்"** என்ற தலைப்பின் அடிப்படையில் இச்செய்தியை உங்களுக்கு விளக்குகிறேன். தலைப்பே சற்று பிரமிக்கதக்கதாக இருக்கலாம்.

ஆம்! செய்யப்படாத அதிசயங்களா! அது என்ன என்ற கேள்வி உங்கள் உள்ளத்தில் எழுகிறதல்லவா? **உங்கள் வாழ்க்கையில் இதுவரை நடக்காத காரியங்கள், நீங்கள் எதிர்பார்க்காத அற்புதங்கள், நினைத்துகூட பார்க்காத சம்பவங்கள் எல்லாம் அதிசயங்கள் என்று சொல்லலாம்.**

நம் அறிவிற்கும், நம் ஆற்றலுக்கும், நம் சிந்தனைக்கும் அப்பாற்பட்ட காரியங்கள் எதிர்பாராமல் நம் வாழ்க்கையில் நடக்கும்பொழுது அது நமக்கு ஒரு பெரிய அதிசயமாக இருக்கலாம்.

தமிழில் இதற்கு **அபூர்வமான செயல்** என்று சொல்லப்படுகிறது. இன்னும் புரியும்படி சொல்ல வேண்டும் என்றால் **இதுவரையிலும் சம்பவிக்காத காரியங்கள் நடைபெறும்போது அவைகளை செய்யப்படாத அதிசயங்கள் என்று கூறுகிறோம்.** இதைக் குறித்து வேதத்தின் அடிப்படையில் தொடர்ந்து தியானிப்போம்.

**அதற்கு அவர்: இதோ, நான் ஒரு உடன்படிக்கை பண்ணுகிறேன் பூமியெங்கும் எந்த ஜாதி களிடத்திலும் செய்யப்படாத அதிசயங்களை உன் ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும் செய்வேன். உன்னோடேகூட இருக்கிற ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய செய்கையைக் காண்பார்கள் உன்னோடேகூட இருந்து, நான் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும்** - யாத்.34:10

கர்த்தர் மோசேயிடம் **"இதோ நான் ஒரு உடன்படிக்கை பண்ணுகிறேன்"** என்று கூறுகிறார். அதாவது சர்வ வல்ல தேவன் தாமே மனிதனோடு ஒரு ஒப்பந்தம் செய்கிறார். கர்த்தர் நம்மை நினைப்பதே பெரிய ஆசீர்வாதம். அதுவும் மனிதனோடு உடன்படிக்கை செய்கிறார் என்றால் அது மிகப்பெரிய பாக்கியம்! என்றே சொல்ல வேண்டும். **இந்த இடத்திலே தேவனுக்கும் அவருடைய பிள்ளை களுக்கும் இடையிலான ஒரு ஒப்பந்தத்தை தேவன் சொல்கின்றார்.** இந்த ஒப்பந்தம் மிகவும் பலப்பட்டதாக, சரியானதாகவே தேவன் செய்திருக்கிறார்.

ஒப்பந்தம் என்பது இருவரிடையே நடைபெறும் செயல்பாடு. வாங்குகிறவர், விற்கிறவர் என இரண்டு பேர் இருப்பார்கள். வாங்குகிறவர் சொத்தைக் குறித்து விசாரிப்பார். விற்கிறவர் விலையை குறித்து பேசியிருப்பார். அது இருவருக்கும் தெரியும். வாங்குகிறவர் பணத்தை கொடுத்துவிட்டால் விற்கிறவர் அந்த சொத்தை எழுதி கொடுத்து விடுவார். இரண்டு பேரின் பங்கும் இதில் உள்ளது. வாங்குகிறவரின் பங்கு பணத்தை கொடுக்க வேண்டும். விற்கிறவரின் பங்கு அவர் சொத்தை எழுதி கொடுக்க வேண்டும். அப்படியாக இங்கே ஒரு ஒப்பந்தம் தேவனுக்கும், அவருடைய பிள்ளை களுக்கும் இடையே நடைபெறுகிறது. இதில் தேவனுடைய பங்கு என்ன?

மேற்கண்ட வசனத்தில் கூறப்பட்டப்படி **"பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும் செய்யப் படாத அதிசயங்களை உன் ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும் செய்வேன்"** இது தான் தேவன் செய்த ஒப்பந்தம். இந்த ஒப்பந்தம் வழியாக ஜனங்கள் கர்த்தருடைய கிரியைகளை பார்ப்பார்கள். **"உன்னோடேகூட இருந்து, நான் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும்"** என்று கர்த்தர் தெள்ளத் தெளிவாக கூறுகிறார். அதற்கு முன்பாக மோசே தேவனிடம் **"எனக்கும் உமது ஜனங்களுக்கும்**

**உம்முடைய கண்களிலே கிருபை கிடைத்த தென்பது எதினால் அறியப்படும் நீர் எங்களோடே வருவதினால் அல்லவா? இப்படியே பூமியின் மேலுள்ள ஜனங்கள் எல்லாரிலும், நானும் உம்முடைய ஜனங்களும் விசேஷித்தவர்கள் என்று விளங்கும்"** என்று கூறுகிறான் **(யாத். 33:16)** இந்த வார்த்தையினால் இங்கே ஒரு ஒப்பந்தம் போடப்படு கின்றது.

**உன் தேவனாகிய கர்த்தர் இரக்கமுள்ள தேவனாயிருக்கிறபடியால், அவர் உன்னைக் கைவிடவுமாட்டார், உன்னை அழிக்கவுமாட்டார், உன் பிதாக்களுக்குத் தாம் ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கையை மறக்கவுமாட்டார்.**

**தேவன் மனுஷனைப் பூமியிலே சிருஷ்டித்த நாள்முதல், உனக்கு முன் இருந்த பூர்வநாட்களில், வானத்தின் ஒருமுனை தொடங்கி அதின் மறுமுனைமட்டுமுள்ள எவ்விடத்திலாகிலும் இப்படிப்பட்ட பெரிய காரியம் நடந்ததுண்டோ, இப்படிப்பட்ட காரியம் கேள்விப்பட்டதுண்டோ. (உபாகமம் 4:31,32)** இந்த வசனங்களில் தேவன் ஒப்பந்தத்தை குறித்து சொல்கின்றார். மனிதர்கள் செய்கின்ற ஒப்பந்தம் மறக்கப்படலாம். ஆனால் கர்த்தர் நான் செய்த ஒப்பந்தத்தை மறக்க மாட்டேன் என்று கூறுகின்றார். எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் இங்கே சொல்லப்பட்டுள்ளது. "தேவன் மனுஷனை சிருஷ்டித்த நாள் முதல் இப்படிப்பட்ட ஒரு காரியம் நடந்துள்ளதா? யாரும் கேள்விப்பட்டதுண்டா? அப்படி செய்யப்படுகின்ற செயலே செய்யப்படாத அதிசயமாகும். சர்வ வல்ல தேவன் செய்த அதிசயங்கள் வேதத்தில் நிறைய உள்ளது. அதில் **மூன்று சம்பவங்களை** மாத்திரம் நான் உங்களுக்கு சொல்ல விரும்புகின்றேன். இங்கே குறிப்பிடுகின்ற 3 சம்பவங்கள் அதற்கு முன்பும் நடக்கவில்லை, பின்பும் நடக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 1. சமுத்திரம் இரண்டாக பிளந்தது!

சமுத்திரம் இரண்டாக பிளந்து, பிரிந்தது செய்யப்படாத அதிசயங்களில் முக்கியமான ஒன்றாகும். யோர்தான் நதி பின்னிட்டு சென்றது யோசுவா காலத்தில். ஆனால் இங்கே மோசே காலத்தில் கடல் இரண்டாக பிளந்தது. பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து போகச் சொல்லிவிட்டு, அவனும், அவனுடைய இராணுவமும் இஸ்ரவேல் ஜனங்களை பின் தொடர்ந்தது. எகிப்தின் இராணுவம் பின் தொடர்வதைக் கண்ட இஸ்ரவேல் ஜனங்கள் பயப்பட்டு ஏன் இங்கு எங்களை அழைத்து கொண்டு வந்தீர். நாங்கள் வனாந்தரத்திலே சாகிறதை பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலை செய்கிறது நலமாக இருக்கும் என்று மோசேயிடம் புலம்பினார்கள். அதற்கு மோசே **"பயப்படாதீர்கள்! கர்த்தர் உங்களுக்காக யுத்தம் செய்வார், நீங்கள் சும்மா இருப்பீர்கள், இன்றைக்கு பார்க்கிற எகிப்தியனை இனி என்றைக்குமே பார்ப்ப தில்லை"** என்று கூறினான்.

**நீ உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டி, சமுத்திரத்தைப் பிளந்துவிடு. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோவார்கள்.**

**மோசே தன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டினான். அப்பொழுது கர்த்தர் இராமுழுதும் பலத்த கீழ்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதை வறண்டு போகப் பண்ணினார். ஜலம் பிளந்து பிரிந்துபோயிற்று - யாத். 14: 16, 21**

கர்த்தர் மோசேயிடம், **"நீ உன் கோலை ஓங்கி உன் கையை சமுத்திரத்தின் மீது நீட்டி சமுத்திரத்தை பிளந்திடு"** என்றார். கர்த்தர் சொன்னபடியே மோசே கீழ்ப்படிந்து அதை செய்தான். **இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து போனார்கள், அவர்கள் வலதுபுறத்திலும் அவர்கள் இடது புறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது. (யாத்தி.14:22)** இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந் தரையிலே நடந்து போனார்கள்.

ஆம் பிரியமானவர்களே! எவ்வளவு பெரிய அதிசயம். இந்த அதிசயம் இதுவரையிலும் செய்யப் படாத அதிசயங்களில் ஒன்றாகும். இயற்கை சீற்றத்தினால் தீவுகள் எல்லாம் காணாமல் போகலாம், கடல் தீவாக மாறலாம். ஆனால் வரலாற்று சிறப்புமிக்க இத்தகைய ஒரு அதிசயம் தேவனால் மாத்திரமே செய்ய முடியும். **இஸ்ரேல் ஜனங்களுக்காக செங்கடல் பிளந்தது, அதே சமயத்தில் எகிப்தின் வீரர்களுக்கு செங்கடல் மூடியது.** இப்படி ஒரு அதிசயம் இதுவரை செய்யப்படாததாகும். உடன்படிக்கை செய்ததை கர்த்தர் எவ்வளவு அருமையாக செய்து காண்பித்தார் என்பதை பாருங்கள்.

## 2. சூரியன் சந்திரன் நடுவானத்தில் நின்றது!

**கர்த்தர் எமோரியரை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக ஒப்புக்கொடுக்கிற**

**அந்நாளிலே, யோசுவா கர்த்தரை நோக்கிப் பேசி, பின்பு இஸ்ரவேலின் கண்களுக்கு முன்பாக: சூரியனே, நீ கிபியோன்மேலும், சந்திரனே, நீ ஆயலோன் பள்ளத்தாக்கின்மேலும், தரித்து நில்லுங்கள் என்றான்.**

**அப்பொழுது ஜனங்கள் தங்கள் சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுமட்டும் சூரியன் தரித்தது, சந்திரனும் நின்றது; இது யாசேரின் புஸ்தகத்தில் எழுதியிருக்கவில்லையா; அப்படியே சூரியன் அஸ்தமிக்கத் தீவிரிக்காமல், ஏறக்குறைய ஒரு பகல்முழுவதும் நடுவானத்தில் நின்றது.**

**இப்படிக் கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல்கேட்ட அந்நாளையொத்த நாள் அதற்கு முன்னுமில்லை அதற்குப் பின்னுமில்லை. கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம்பண்ணினார்**

**- யோசுவா 10 : 12 -14**

ஒரு சாதாரண மனிதன் யோசுவாவைக் கொண்டு கர்த்தர் சூரியனையும், சந்திரனையும் நிறுத்தி மிகப் பெரிய அதிசயத்தை செய்தார். சூரியனும், சந்திரனும் யோசுவா சொன்ன இடத்திலே ஆங்காங்கே அப்படியே தரித்து நின்றது. பிரியமானவர்களே! இன்றைய காலக்கட்டத்தில் விஞ்ஞானம் மாபெரும் வளர்ச்சி அடைந்தாலும் இப்படிப்பட்ட ஒரு காரியத்தை செய்ய முடியுமா? இல்லவே இல்லை! **இதைப்போல ஒரு சம்பவம் யோசுவா காலத்துக்கு முன்பும் நடக்கவில்லை,** அதற்கு பின்பும் இதுவரையிலும் நடக்கவில்லை. இதை செய்யப்படாத அதிசயங்களில் மாபெரும் அதிசயம் என்றே சொல்லலாம்.

## 3. சூரிய கடியாரத்தில் சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பியது!

எசேக்கியா என்னும் மாபெரும் ராஜா வியாதியாக இருந்தான். அவனுடைய நாட்கள் முடிந்து விட்டது. நீ மரித்துவிடுவாய். எனவே உன் வீட்டுக் காரியத்தை எல்லாம் ஒழுங்குபடுத்தும் என்று ஏசாயா தீர்க்கதரிசி எசேக்கியாவிடம் சொல்லிவிட்டான். இதைக் கேட்ட எசேக்கியா விற்கு கவலை. உடனே சுவர்புறமாக திரும்பி கொண்டு ஜெபம் செய்தான். **ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத் தருளும் என்று விண்ணப்பம் பண்ணினான். எசேக்கியா மிகவும் அழுதான். 2 இராஜாக்கள் 20:3.** ஏசாயா தீர்க்கதரிசி பாதி முற்றத்தைவிட்டு அப்புறம் போகிறதற்கு முன்பே கர்த்தருடைய வார்த்தை உண்டாகி **"நீ திரும்பிப்போய், என் ஜனத்தின் அதிபதியாகிய எசேக்கியாவை நோக்கி: உன் தகப்பனாகிய தாவீதின் தேவனாயிருக்கிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்கு வேன்; மூன்றாம் நாளிலே நீ கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவாய். உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன்; உன்னையும் இந்த நகரத்தையும் அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்து, என் நிமித்தமும் என் தாசனாகிய தாவீதின் நிமித்தமும் இந்த நகரத்துக்கு ஆதரவாய் இருப்பேன் என்று சொல் என்றார்.** அந்தப்படியே தீர்க்கதரிசி அத்திபழத்து அடையை பிளவையின்மேல் பற்றுப்போட்டபோது எசேக்கியா பிழைத்துக்கொள்கின்றான். அதன்பிறகு எசேக்கியா இந்த காரியம் நடப்பதற்கு அடையாளம் கேட்கிறான். அதற்கு தீர்க்கதரிசி கர்த்தர் தாம் சொன்ன வார்த்தையின்படியே செய்வாரென்பதற்கு, கர்த்தரால் உனக்கு உண்டாகும் அடையாளமாக சாயை பத்துப் பாகை முன்னிட்டுப் போகவேண்டுமோ, பத்துபாகை பின்னிட்டுத் திரும்ப வேண்டுமோ என்று கேட்டான். அதற்கு எசேக்கியா **"சாயை பத்துப் பாகை முன்னிட்டுப்போகிறது லேசான காரியம். அப்படி வேண்டாம், சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்ப வேண்டும்"** என்றான். அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில், **அவர் ஆகாசுடைய சூரிய கடியாரத்தில் பாகைக்குப் பாகை முன்போன சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பும்படி செய்தார்.** எசேக்கியா படுக்கையில் இருந்தாலும் விவரமாகத்தான் இருந்திருக்கிறான். **கடியாரம் முன்னால் ஓடுவது பெரிய அதிசயம் அல்ல. பின்னால் ஓடுவது தான் பெரிய அதிசயம்.** கர்த்தர் எசேக்கியாவின் விருப்பத்திற் கேற்ப சாயை பத்துப்பாகை பின்னிட்டு திரும்பும் படியாக செய்தார். இவ்வாறு மாபெரும் செய்யப் படாத அதிசயத்தை அன்று கர்த்தர் செய்தார். இந்த சம்பவம் **II இராஜாக்கள் 20-ம் அதிகாரம் 5-ம் வசனம் முதல் 11-ம் வசனம் வரை சொல்லப் பட்டுள்ளது.**

அன்பானவர்களே, வேதத்தின் அடிப்படையில் மேற்சொல்லப்பட்ட மூன்று சம்பவங்களும் இதுவரை செய்யப்படாத அதிசயங்களாகும். தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் இடையேயான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியான **"எந்த ஜாதிகளிடத்திலும் செய்யப்படாத ஒரு அதிசயத்தை நான் செய்வேன் என்றவர் மெய்யாகவே செய்து முடித்தார். அவர் செய்து முடித்ததின் நிமித்தம் தேவனுடைய பகுதியை அவர் நிறைவேற்றி விட்டார்.**

இப்பவும் ஜனங்கள் அவர்களுடைய பகுதியை செய்வதற்கு சில ஆலோசனைகளை **யாத்திராகமம் 34-ம் அதிகாரத்தில் 1 முதல் 4 வரையுள்ள** வசனங்களில் சொல்லியிருக்கிறார். இந்த ஆலோசனைகள் இஸ்ரவேல் ஜனங்களுக்கு மட்டுமல்ல. அவருடைய பிள்ளைகளாகிய நமக்கும் சொல்லப்படும் ஆலோசனைகளாம். மேற்சொல்லப்பட்ட வசனங்களின் அடிப்படையில் **ஆறு காரியங்கள் நமக்கு ஆலோசனையாக கூறப்பட்டுள்ளது.** இந்த ஆறு காரியங்களையும் நாம் செய்ய கட்டாயம் கடமைப்பட்டிருக்கிறோம். அதை செய்து நிறைவேற்றினால் மாத்திரமே நாம் நம்முடைய பகுதியை நிறைவேற்றுவதாக பொருள். அப்போதுதான் ஒப்பந்தத்தின் இரு பகுதிகளும் சரியாக இருக்கும். நாம் நம்முடைய பகுதியை செய்ய தவறினால் நாம் எதிர்பார்க்கும் செய்யப் படாத அதிசயங்கள் எதுவும் நடைபெறாது. நாம் செய்ய வேண்டியவைகளாக சொல்லப்படும் ஆறு ஆலோசனைகளை ஒன்றன்பின் ஒன்றாக சிந்திப்போம்.

## 1. ஆயத்தமாகு (Be ready)

**கர்த்தர் மோசேயை நோக்கி: முந்தின கற்பலகைகளுக்கு ஒத்த இரண்டு கற்பலகை களை இழைத்துக்கொள். நீ உடைத்துப்போட்ட முந்தின பலகைகளில் இருந்த வார்த்தைகளை அவைகளில் எழுதுவேன்.**

**விடியற்காலத்தில் நீ ஆயத்தமாகி, சீனாய் மலையில் ஏறி, அங்கே மலையின் உச்சியில் காலமே என் சமுகத்தில் வந்து நில்.**

**- யாத்தி.34:1-2**

முதலாவது கர்த்தர் மோசேயை பார்த்து **"ஆயத்தமாகு"** எனக் கூறுகின்றார். நான் உன் வாழ்க்கையில் செய்யப்படாத அதிசயம் செய்ய வேண்டும் என்றால் நீ ஆயத்தமாக வேண்டும். ஆயத்தமாகி பலகைகளை எடுத்து வா, நான் மீண்டும் எழுதுவேன் என்கிறார். கர்த்தர் நம் மூலம் அற்புதங்கள் அதிசயங்கள் செய்ய வேண்டும் என்றால் ஆயத்தம் அவசியம்.

## 2. விடியற்காலமே வா (Come up in the Early Morning)

இரண்டாவது, எப்பொழுது ஆயத்தமாக வேண்டும் என்று கர்த்தர் தெளிவாக கூறுகிறார். விடியற்காலத்தில் நீ ஆயத்தமாகு என்கிறார். அன்பிற்குரியவர்களே! நீங்கள் அனைவரும் இந்த காரியத்தை சற்று கவனமாக எடுத்துக்கொள்ள வேண்டும். விடியற்காலமே ஆயத்தமாகு என்று கர்த்தர் நேரத்தைகூட தெளிவாக சொல்கிறார். அதிகாலை நேரம் தேவனை சந்திப்பதற்கு ஓர் அற்புதமான நேரம்.

## 3. சீனாய் மலையின் உச்சி (Top of the Mount Sinai)

மூன்றாவதாக, விடியற்காலத்தில் ஆயத்தமாகி எங்கே வரவேண்டும்? **சீனாய் மலையின் உச்சிக்கு வந்துவிடு என்று தேவன் மோசேயை சந்திக்கும் இடத்தையும் தெளிவாக கூறுகின்றார்.** சீனாய் மலை எதைக் குறிக்கிறது. அது தேவ பிரசன்னத்தை குறிக்கிறது. (Place of God's Presence) **தேவ பிரசன்னம் இருக்கின்ற ஒரு இடத்திற்கு தான் தேவன் வருவார்.** தேவ பிரசன்னம் இல்லாத இடத்திற்கு தேவன் ஒருபோதும் வரவே மாட்டார். தேவனை சந்திக்கும் நேரம் எப்படி முக்கியமோ அதேப்போல இடமும் முக்கியமாயிருக்கிறது.

## 4. என் சமூகத்தில் வந்து நில் (Present yourself to me)

நான்காவதாக மோசேயை பார்த்து கர்த்தர், **"நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் ஆயத்தத்தோடு என் சமூகத்தில் வந்து நில்"** என்றார். என் சமூகத்தில் வந்து நில் என்பதற்கு உன்னை என்னிடத்திலே ஒப்புக்கொடு என்று அர்த்தமாகும். மோசே கர்த்தர் சொன்னபடியே செய்தான். பல லட்சக்கணக்கான மக்களை எல்லாம் விட்டுவிட்டு தேவன் மோசேயை மாத்திரம் அழைக்கிறார். அதுதான் பிரத்தி யேகமான அழைப்பு விசேஷித்த அழைப்பு!

## 5. பிரித்தெடுத்தல் (Set apart)

- **உன்னோடே ஒருவனும் அங்கே வரக்கூடாது. மலையிலெங்கும் ஒருவனும் காணப்படவுங் கூடாது. இந்த மலையின் சமீபத்தில் ஆடுமாடு மேயவுங்கூடாது என்றார். - யாத்தி.34:3**

ஐந்தாவதாக கர்த்தர் மோசேயை பிரித்தெடுப்பதினால், அவனோடுகூட ஒருவனும் வரக்கூடாது. (No man shall come with you) மலையெங்கும் ஒருவனும் காணப்படக்கூடாது. யோசுவாகூட மலையின் அடிவாரத்தில்தான்

இருந்தான். ஏன் கர்த்தர் மிகவும் கண்டிப்பாக இதைச் சொல்வாரென்றால் **தேவன் நம்மை சந்திக்கும் போது, வேறு எந்த மனித தொடர்பும் இடையூறாக இருக்க கூடாது.** அவர் அவருக்குரியவர்களை பிரித்தெடுத்து பயன்படுத்துகிறவர்.

## 6. உலக காரியங்களை தவிர்த்தல் (Avoiding worldly matters)

ஆறாவதாக இந்த மலையைச் சுற்றிலும் ஆடு, மாடு கூட அங்கே மேயக் கூடாது. எந்த உயிரினமும் இருக்க கூடாது. ஏனென்றால் அந்த மலை முழுவதும் பரிசுத்தமாய் இருக்க வேண்டும். ஆடு, மாடு எல்லாம் உலக பிரகாரமான காரியங்களாகும். **பரிசுத்தமுள்ள தேவன் இறங்கி வருவதற்கு அங்கே தேவையில்லாதவைகள் எதுவும் காணப்படக்கூடாது** என கர்த்தர் தெளிவாக மோசேயிடம் சொல்லியிருந்தார்.

**தேவ பிரசன்னத்திற்குள் வந்துவிட்டோம் என்றால் அங்கே செல்போன், மற்ற எந்த உலக காரியங்களுக்கும் இடம் இல்லை. தேவ பிரசன்னம் ஒன்றே நம் எண்ணமாக இருக்க வேண்டும்.** அந்த இடம் ஏன் பரிசுத்தமாய் இருக்க வேண்டும். பரிசுத்தமுள்ளவர் அங்கு இறங்க வேண்டும் என்றால் அந்த இடம் முழுவதும் பரிசுத்தமாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் தேவன் இறங்கி வருவார். உங்களை படைத்தவரிடம் பேசப் போகிறீர்கள் அதை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. வேதம் வாசிக்கும் பொழுது, ஜெபிக்கும்பொழுது எந்த இடையூறும் உங்களுக்கு வரக்கூடாது.

தேவன் மோசேயிடம் ஆலோசனையாக ஆறு காரியத்தை கூறியிருந்தார். அதை மோசே அப்படியே செய்தான். மோசே விடியற்காலையில் எழும்பி ஆயத்தமாகிவிட்டான். கர்த்தர் கட்டளையிட்டபடி இரண்டு பலகைகளோடு சீனாய் மலையின் உச்சிக்கு வந்து அவர் சமூகத்தில் நின்றான். கர்த்தர் சொன்ன அத்தனை காரியத்தையும் மிகச் சரியாக செய்தான். **அப்பொழுது மோசே முந்தின கற்பலகைகளுக்கு ஒத்த இரண்டு கற்பலகைகளை இழைத்து, அதிகாலமே எழுந்திருந்து, கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே அவ்விரண்டு கற்பலகைகளையும் தன் கையிலே எடுத்துக்கொண்டு, சீனாய்மலையில் ஏறினான். - யாத்தி.34:4.** சர்வ வல்ல தேவனும் தாம் சொன்னபடியே ஒரு மேகத்தில் இறங்கினார். அங்கே அவன் அருகிலே வந்து அவருடைய நாமத்தை கூறுகின்றார். **கர்த்தர் ஒரு மேகத்தில் இறங்கி, அங்கே அவன் அருகே நின்று, கர்த்தருடைய நாமத்தைக் கூறினார்.**

**- (யாத்தி.34:5)**

**"ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், எங்கள் நடுவில் ஆண்டவர் எழுந்தருளவேண்டும். இந்த ஜனங்கள் வணங்காக்கழுத்துள்ளவர்கள். நீரோ, எங்கள் அக்கிரமத்தையும் எங்கள் பாவத்தையும் மன்னித்து, எங்களை உமக்குச் சுதந்தரமாக ஏற்றுக்கொள்ளும்" என்றான் - யாத்தி.34:9.** இந்த வசனத்தின் அடிப்படையில் மோசே சீனாய் மலையில் தனக்கு காட்சியளித்த தேவனிடம் தன்னுடைய ஜனங்களுக்காக மன்றாடினான். மோசேயின் மன்றாட்டின் நிமித்தம் தான் தேவன் இந்த உடன்படிக்கையை ஏற்படுத்தினார். அதையே நாம் இச்செய்தியின் மூலமாக சிந்தித்தோம்.

ஆம். அன்பு தேவ ஜனமே, பூமியெங்கும் செய்யப்படாத அதிசயங்களை செய்வதற்கு நம்முடைய தேவன் ஆயத்தமாக இருக்கிறார். நாம் ஆயத்தமாக இருக்கின்றோமா? இப்படிப்பட்ட சம்பவங்கள் மோசே, யோசுவா, எசேக்கியா வாழ்க்கையில் மட்டுமல்ல. உங்கள் வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட அதிசயங்கள் நடைபெற வேண்டுமா? மேற்சொல்லப்பட்ட ஆறு காரியங்கள் தான் அதற்கு சரியான வழிமுறை. அவைகளை யார் ஒருவர் சரியாக பின்பற்றுகிறார்களோ நிச்சயம் அப்படிப்பட்டவர்களுடைய வாழ்க்கையில் அதிசயங்கள் நடக்கும். **எந்த அளவுக்கு தேவனோடுகூட நீங்கள் தரித்திருக்கிறீர்களோ அந்த அளவுக்கு அவரும் உங்கள் மத்தியில் கிரியை செய்வார். உங்களை முழுவதுமாக தேவனிடத்தில் தாழ்த்தி ஒப்புக்கொடுங்கள். உங்கள் பகுதியை நீங்கள் செய்யுங்கள். அப்பொழுது கர்த்தர் அவருடைய பகுதியை சரியாக செய்து மகத்தான அதிசயங்களை உங்கள் வாழ்க்கையில் செய்வார்.**

**இச்செய்தியை வாசிக்கும் அன்புக்குரியவர்களே, ஒவ்வொரு நாளும் அதிகாலையில் தகுந்த ஆயத்தத்தோடு, உலக பிரகாரமான காரியங்களையெல்லாம் ஒதுக்கிவிட்டு, உங்களை தனிமைப்படுத்திக்கொண்டு, அவருடைய பிரசன்னம் இருக்கும் இடத்தில் வந்து நில்லுங்கள். அப்பொழுது பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும் செய்யப்படாத அதிசயங் களை கர்த்தர் உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும் மற்றும் உங்கள் கைகளின் கிரியைகளிலும் செய்து தம்முடைய உடன்படிக்கையை நிறைவேற்றுவார்.** இப்படிப்பட்ட மேலான அனுபவங்களையும், ஆசீர்வாதங்களையும் நீங்கள் பெற்றுக்கொள்வதற்கு தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வாராக! தேவ கிருபையும் சமாதானமும் உங்களோடுகூட இருப்பதாக!



# Praise Report
# துதி அறிக்கை

## ஜெபத்தைக் கேட்டு 3 பேருக்கும் ஜீவனைத் தந்த கர்த்தர்



என் பெயர் ஹெலன் பெமினி. என்னுடைய சித்தி அன்பரின் ஊழிய பங்காளராக இருக்கிறார்கள். அவர்கள் திருச்சியில் நடைபெறும் கூட்டத்திற்கு தொடர்ந்து வருவார்கள். அவர்கள் மூலம் நானும் கூட்டத்திற்கு வர ஆரம்பித்தேன்.

கடந்த கொரோனா முதல் அலையில் என் அப்பா, அம்மா, தம்பி மூன்று பேரும் அதிகமாக பாதிக்கப்பட்டார்கள். அரியலூர் அரசு மருத்துவமனையில் ஆக்ஸிஜன் சிலிண்டர் பற்றாக்குறை ஏற்பட்டதால் திருச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்படி கூறிவிட்டார்கள். திருச்சியில் 1 மாதகாலம் இருந்து சிகிச்சை பெற்று வந்தனர். மூன்று பேரும் உயிருக்கு ஆபத்தான நிலையிலேயே இருந்தார்கள். என் அப்பாவிற்கு அந்த நேரத்தில் சுகர் அதிகமாகி விட்டது. உடனே நானும், என் சித்தியும் அன்பரின் ஊழியத்திற்கு தொடர்புக் கொண்டு அவர்களுக்காக ஜெபிக்கும்படி தொலைபேசி வாயிலாக கேட்டுக் கொண்டோம். அவர்களும் பாரத்துடன் ஜெபித்து இயேசு கிறிஸ்து குணமாக்குவார் என்று கூறினார்கள்.


**கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு ஆபத்தான நிலையை அவர்கள் கடந்து, நல்ல சுகத்துடன் அவர்கள் மூன்று பேரும் வீடு திரும்பும்படி உதவி செய்தார். கொரோனா முதல் அலையில் எங்கள் குடும்பத்தில் உள்ள மூன்று உயிர்களை காப்பாற்றிய கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.**

**- சகோதரி ஹெலன் பெமினி, அரியலூர்**

## பொருத்தனை ஜெபத்தைக் கேட்ட எந்தன் அன்புள்ள ஆண்டவர் இயேசு!

என் பெயர்அம்புரோஸ். வயது 83. அரசு முதியோர் உதவித் தொகையை கடந்த 15 ஆண்டுகளாக பெற்று வந்தேன். சமீபத்தில் எனக்கு வந்துக்கொண்டிருந்த உதவித் தொகையை நிறுத்தி விட்டார்கள். இதற்காக நான் இருமுறை மனு கொடுத்தேன். பணம் வரவில்லை. அந்த நேரத்தில் **அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சியில் அன்பு மகள் Dr. ஜேன் ஜாஷ்வா செய்தி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். செய்தியின் இறுதியில் பொருத்தனை செய்யும்படி கூறினார்கள். உடனே நானும் அன்பரின் ஊழியத்திற்கு மாதந்தோறும் சிறு காணிக்கை அனுப்புவதாக பொருத்தனை**

**செய்து ஜெபித்தேன். அடுத்த மாதமே எனக்கு அரசு உதவித்தொகை கிடைக்கும்படி எனக்கு கர்த்தர் அற்புதம் செய்தார்.**



என் மகள் திருமணம் ஆகாமல் என்னுடன் இருக்கிறாள். அவளுடைய மார்பில் ஒரு கட்டி உண்டாகி வலி ஏற்பட்டு மருத்துவரிடம் காண்பித்தோம். ஆனால் கட்டி பெரிதாகிக்கொண்டே இருந்தது. வலி, வேதனையோடு மகள் இருந்தாள். அந்த நேரத்தில் டி.வி.யில் அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தை காட்டினார்கள். **என் மகள், "ஆண்டவரே என் மார்பில் உள்ள கட்டி மறைய வேண்டும்" என ஜெப ஸ்தலத்தை நோக்கியவாறு அழுது ஜெபித்தாள். நெஞ்சிலிருந்த கட்டி அடுத்த நாளே மறைந்து போனது. கட்டி எப்படி மறைந்தது என மருத்துவரே என் மகளை பார்த்து விட்டு ஆச்சரியப்பட்டார். சுகம் கொடுத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரங்களை செலுத்துகிறோம்.**

**சகோ. அம்புரோஸ், கும்பகோணம்.**

## மருத்துவ தேர்வில் மகத்தான வெற்றி!

எனது மகள் சோபியா **MBBS** இறுதியாண்டு படித்துக் கொண்டிருக்கும் போது மூன்றாம் ஆண்டு இறுதிதேர்வு மதிப்பெண் சான்றிதழ் காணாமல் போய்விட்டது. நாங்கள் எல்லா இடங்களிலும் தேடியும் கிடைக்காததால் கவலையடைந்தோம். இதற்காக ஜெபிக்கும்படி அன்பரின் ஊழியத்தை தொடர்புகொண்டு ஜெபித்தோம். மேலும் அந்த சான்றிதழ் கிடைத்தால் அன்பரின் ஊழிய பத்திரிக்கையில் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்தேன்.

அதுமாத்திரமல்ல, கடந்த மாதம் நடந்த **MBBS** இறுதியாண்டு தேர்வை குறித்து எனது மகள் மிகுந்த பயத்திலும், மனஅழுத்தத்திலும் இருந்தாள். என்னால் தேர்வை சந்திக்க முடியாது என சொல்லிக்கொண்டே இருந்தாள். எங்களுக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. அந்த சூழ்நிலையில் ஏப்ரல் மாதம் 16ம் தேதி சென்னை **YMCA**-ல் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களை சந்தித்து ஜெபிக்கும்படி கர்த்தர் கிருபை செய்தார். சகோதரர் என் மகளுக்காக ஜெபிக்கும்பொழுது **"கர்த்தர் தேர்வுகளில் வெற்றியை கட்டளையிடுவார் என கூறினார்கள். அதேபோன்று நாங்கள் ஆச்சரியப்படும்படியாக கர்த்தர் அற்புதங்களை செய்தார். எனது மகள் பயந்து கொண்டிருந்த செய்முறை தேர்வுகளை நல்ல முறையில் முடிக்கக் கர்த்தர் கிருபை செய்தார். காணாமல் போன சான்றிதழும் கிடைத்தது. அற்புதம் செய்த தேவனை துதிக்கின்றேன்.**

**- திரு. T. செல்லசுவாமி, சென்னை**

## கேன்ஸர் நோய் மறைந்த அதிசயம்

எனது மனைவி ரேச்சல் சியாமளாவிற்கு தொண்டைப் பகுதியில் தைராய்டு கட்டி இருந்தது. அந்த கட்டியை அறுவை சிகிச்சை செய்து பயாப்ஸி செய்ததில் அது கேன்ஸர் கட்டி என கூறி விட்டார்கள். இந்நிலையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை தொடர்புகொண்டு தொலைபேசி வாயிலாக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டோம். அதன் பிறகு ஆறு மாதம் கழித்து **Scan & Blood Test** அனைத்தும் செய்தோம். ரிப்போர்டை பார்த்த மருத்துவர்கள் கேன்ஸருக்கான எந்த அறிகுறியும் இல்லை என கூறினார்கள். இதைக் கேட்டு நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்து தேவனை அதிகமதிகமாக துதித்தோம்.

**- திரு.ஜோசப் மகேஷ், திருப்பத்தூர்**

## பிசாசின் மந்திர கட்டுகளை அழித்து விடுதலையாக்கிய கர்த்தர்!



2018ம் ஆண்டு ஜுன் மாதம் திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் நானும் என் மகளும் கலந்து கொண்டோம். பல ஆண்டுகளாக மந்திரக் கட்டுகளால் படாத பாடுபட்ட மகளுக்கு சர்வ வல்லதேவன் அந்நாளில் ஜெப வேளையில் விடுதலையை கொடுத்தார். மகளுடைய குடும்ப வாழ்க்கையில் இருந்த பிரச்சனைகளை கர்த்தர் மாற்றி சமாதானம் நிலவ உதவி செய்தார். தொடர்ந்து மகளுக்கு இரட்டை பெண் குழந்தைகள் பிறக்கும்படியும் கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! கர்த்தர் செய்த அற்புதத்தை மறவாமல் எனது பொருத்தனை காணிக்கையை ஊழியப் பணிகளுக்கு தருகின்றேன்.

**- திருமதி. அனிதா ரூபி, திண்டுக்கல்**







# பங்காளர்களின் பக்கம்



## 20 வருட பங்காளர் வாழ்வில் கர்த்தர் செய்த மகத்தான செயல்கள்!

தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும் – மத்தேயு 6:33

என் பெயர் ஜெயந்தி. எங்களுக்கு கர்த்தர் இரண்டு பெண் பிள்ளைகளை கொடுத்துள்ளார். நாங்கள் கர்த்தருக்கு மிகவும் பயந்தவர்கள். 20 வருடங்களுக்கு முன்னால் சகோதரர் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் தூத்துக்குடிக்கு வந்த பொழுது எளியவர்களாகிய எங்களை மிகவும் கரிசனையோடு விசாரித்து எங்களுக்காக ஜெபம் செய்தார்.

ஜெபம் முடிந்து எங்களிடம் இருந்த பத்து ரூபாயை சகோதரரிடம் காணிக்கையாக கொடுத்தோம். அவர்கள் சந்தோஷமாக வாங்கி எங்களை ஆசீர்வதித்து, கலங்காதீர்கள்! நீங்கள் கர்த்தருக்கு உண்மையாய் இருக்கிறீர்கள் ஆகவே உங்களை கர்த்தர் உயர்த்துவார் 'உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களை பெறுவான்' (நீதி.28:20) "நீங்கள் இனிமேல் பல ஆயிரங்களை ஊழியத்திற்கு கொடுக்கும் நாட்கள் வரும்" என்று கூறினார்கள்.

எங்களுக்கு இதைக் கேட்டு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. நம்பிக்கையோடு வீடு திரும்பினோம். சகோதரரிடத்திலிருந்து பதில் கடிதமும், கடன் தீர்க்கும் இயேசு மற்றும் சில புத்தகங்களும் அடங்கிய பார்சல் வந்தது. பத்து ரூபாய் தானே காணிக்கை கொடுத்தோம், இதற்கு இத்தனை புத்தகங்களா என வியந்தோம்.

என் கணவர் தன்னுடைய வேலையில் மிகவும் நேர்மையாக இருப்பார். அவருக்கு வருகிற மாத சம்பளம் குடும்பத்திற்கே சரியாக இருக்கும். சகோதரரின் எளிமையை நாங்கள் கண்டு, வருடத்திற்கு ஒருமுறை கடன் வாங்கியாவது ஐந்தாயிரம் ரூபாயை ஊழியத்திற்காக அனுப்பி விடுவோம்.

நாட்கள் சென்றது, கர்த்தர் சகோதரர் மூலம் கூறின தீர்க்கதரிசனம் நிறைவேற ஆரம்பித்தது. எங்கள் பிள்ளைகள் நன்றாக படித்தார்கள். மூத்த மகளுக்கு நல்ல வேலை கிடைத்தது. அதில் வந்த முதல் மாத சம்பளம் 35,000/- ரூபாயை சகோதரன் நடத்தும் குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு தருகின்றோம். இவ்வாறு எங்களை உயர்த்திய கர்த்தரை மனதார துதிக்கின்றோம்.

நீங்களும் இவ்விதமாக ஊழியத்தை நேசித்து கொடுங்கள், ஜெபியுங்கள். அப்பொழுது நிச்சயமாக உங்கள் குடும்பமும் வறுமையிலிருந்து காக்கப்பட்டு உயர்த்தப்படுவது நிச்சயம்.

**திருமதி. ஜெயந்தி, தூத்துக்குடி**

அன்பரின் ஊழிய பங்காளராக விரும்புகிறவர்கள் எங்கள் வாட்ஸ்அப் எண்ணிற்கு தொடர்புகொண்டு பங்காளராவதற்கான தகவல்களை அறிந்துக் கொள்ளுங்கள். **95004 87061**

மேலும் அன்பரின் ஊழியத்தைப் பற்றி விரிவாக அறிந்துக்கொள்ள எமது வெப்சைட் பக்கத்தை அணுகவும்.
www.ministryofjesus.in

# அன்பரின் ஊழியத்தின் மூலம்
## நடைபெற்று வரும் கூட்டங்கள்...

✔ நற்செய்திக் கூட்டங்கள் ✔ குடும்ப ஆசீர்வாதக் கூட்டங்கள்
✔ அப்போஸ்தல தீர்க்கதரிசன வல்லமை முகாம்





சகோதரி ஜெயந்தி குடும்பத்தினர் 20 வருடங்களாக நம் அன்பரின் ஊழிய பங்காளராக இருந்து வருகிறார்கள். சகோதரர் கூறிய தீர்க்கதரிசனத்தை தேவன் தாமே அவர்கள் வாழ்வில் நிறைவேற்றி, மகத்தான காரியங்களை செய்து வருகிறார். ஆகவே சர்வ வல்ல தேவனை ஸ்தோத்தரிப்போம்.

இக்கட்டான சூழ்நிலையில் உள்ள பலர் நம்முடைய கூட்டங்களுக்கு வந்து கர்த்தரிடமிருந்து ஏராளமான நன்மைகளை, அதிசயங்களை தொடர்ந்து பெற்றுக் கொண்டிருக்கின்றனர். அதற்காகவும் கர்த்தரை துதிப்போம்.

உங்கள் வாழ்க்கையிலும் கர்த்தர் இப்படி செய்த நன்மைகளை எங்களுக்கு தபால் மூலம் அல்லது வாட்ஸ்அப் வாயிலாக போட்டோவுடன் தெரியப்படுத்தினால் அவற்றை நாங்கள் இந்த சிறப்பு பகுதியில் கர்த்தருக்கு மகிமையாக வெளியிடுவோம்.

விசேஷமாக நம்முடைய கூட்டங்களுக்கு வருகிறவர்களில் அநேகர் கர்த்தரை அறியாத பிள்ளைகள். தீராத வியாதிகள், பல ஆண்டுகளாக படுக்கையில் உள்ளவர்கள், செய்வினை ஏவல், மாந்திரீக காரியங்களினால் போராடுகிற மக்கள் அதிகமாக வருகின்றனர். கர்த்தர் தாமே அவர்களை விடுதலையாக்கி அனுப்புகிறார்.

நம்முடைய நற்செய்தி கூட்டங்கள், குடும்ப ஆசீர்வாதக் கூட்டங்கள் தொடர்ந்து பல இடங்களில் நடைபெற பணத்தேவைகள் அதிகமாக இருக்கிறது. உங்கள் குடும்பத்தின் சார்பாக இந்த கூட்டங்களுக்கு நீங்கள் உதவி செய்யுங்கள். உற்சாகமாய் தாங்குங்கள். கர்த்தர் உங்கள் பிரயாசத்திற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து ஆசீர்வதிப்பார்.


Follow us on
Ministry of Jesus

# BIBLIO THEOLOGICAL FOUNDATION COURSE - 2022

**நாள் & நேரம்**

அக்டோபர் 3-ம் தேதி மாலை 4 மணி முதல்
அக்டோபர் 5-ம் தேதி மதியம் 2 மணி வரை

**இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம், தில்லைநகர், திருச்சி.**



- பழைய ஏற்பாடு
- புதிய ஏற்பாடு
- இறையியல்
- நற்செய்திப் பணி
- அருட்பணி
- ஆலோசனை பணி
- ஆராதனை
- கிறிஸ்தவ கல்வி
- சமயம்
- திருச்சபை வரலாறு
- விவிலிய கலைச்சொற்கள்

**தமிழிலும் ஆங்கிலத்திலும் கற்றுத் தரப்படும்**

## Rev. Dr. A. ஜாஷ்வா

அனைத்து வகுப்பிலும் கலந்து கொள்பவர்களுக்கு மட்டும் அழகிய சான்றிதழ் வழங்கப்படும்

முழு நேர ஊழியர்கள், பகுதி நேர ஊழியர்கள், விசுவாசிகள், சபை அங்கத்தினர்கள் ஆண் / பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம்.
வயது வரம்பு கிடையாது.
12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டும் அனுமதி கிடையாது.

3 நாட்கள் உணவு மற்றும் தங்குமிடம் முற்றிலும் இலவசம்

குறைந்த இருக்கைகள் மட்டும் உள்ளதால் உங்கள் இருக்கைக்கு முந்துங்கள்



பதிவுக் கட்டணம்
ரூ. 200/-
பயிற்சிக் கட்டணம்
ரூ. 1000/-

மேலும் விபரங்கள் அறிய : 73585 66066
வாட்ஸ் அப் மட்டும் : 99446 66066

# அறிவிப்பு

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பரின் ஊழிய பங்காளர் மற்றும் வாசகர்களுக்கு தெரியப்படுத்துவது என்னவென்றால் திருநெல்வேலி பாளையங்கோட்டை திருவனந்தபுரம்ரோடு கதவுஎண். 41B/2A முதல் மாடியில் இயங்கி வந்த அன்பரின் ஊழிய ஜெபமையம் தவிர்க்க முடியாத சில காரணங்கள் நிமித்தம் 15/08/2022 திங்கட்கிழமை முதல் செயல்படாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இதுவரை மாதந்தோறும் தவறாமல் திருநெல்வேலி ஜெபமையத்திற்கு வந்து ஜெபித்தவர்களுக்காகவும், ஊழியத்தை தாங்கினவர்களுக்காகவும் எங்களின் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். **மாதந்தோறும் ஊழியத்தை தாங்குபவர்கள் தொடர்ந்து ஊழியத்தை தாங்கும்படியாக கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் நேரிடையாக உங்கள் காணிக்கையை M.O. மூலமாகவோ, D.D. மூலமாகவோ, Cheque மூலமாகவோ மற்றும் எங்களுடைய வங்கி கணக்கு மூலமாகவோ செலுத்தலாம். வங்கி கணக்கு பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. 10848469699 | Account No. 10848559426 | Account No. 10848474869 |

**State Bank Of India, Cantonment, Trichy Main Branch**

**IFS Code : SBIN 0000930**

நீங்கள் காணிக்கை செலுத்தும்போது வழக்கம் போல் தலைமை அலுவலகத்தில் இருந்து தவறாமல் உங்களுக்கு கடிதம் அனுப்பப்படும்.

உங்கள் காணிக்கையை நேரிடையாக செலுத்த முடியாதவர்கள் உங்கள் வீட்டிற்கு நாங்கள் நேரில் வந்து வாங்கிச் சென்றால் நலமாய் இருக்கும் என்று எண்ணுவீர்களானால் அப்படிப்பட்டவர்கள் 9488908328 என்ற அலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்கள் வீட்டில் வந்து வாங்குவதற்கான ஏற்பாடுகளை செய்ய ஆயத்தமாயிருக்கிறோம். உங்கள் ஜெபமும், உங்களுடைய உதாரத்துவமான காணிக்கையும் இவ்வூழியத்தை இன்னும் அதிகமாய் செய்வதற்கு உதவியாய் இருக்கும். **உங்கள் ஒவ்வொருவருக்காகவும் எங்கள் குடும்பத்தினரும், அலுவலகப் பணியாளர்களும் தவறாமல் ஜெபித்து வருகிறோம். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.**



# தேவ சகாயம் என்ற லாசரஸ்

## (1712 - 1752)

இந்தியாவிற்கு வருகை புரிந்த இயேசுவின் சீடர் தோமாவிற்கு பின் இரத்த சாட்சியாக மரித்த வேத சாட்சி தேவசகாயம். இவருடைய விசுவாச அனுபவங்களைப் பற்றி இந்த மாதம் அறிந்துக் கொள்வோம்.

### பிறப்பும், குடும்ப சூழலும்

தமிழ்நாட்டில் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் நட்டாலம் என்னும் கிராமத்தில் 1712-ம் ஆண்டு ஏப்ரல் 23-ம் தேதி தேவசகாயம் பிறந்தார். இவருடைய தந்தை பெயர் வாசுதேவன், தாயின் பெயர் தேவகி அம்மா. வசதியான குடும்பத்தில் பிறந்த இவருக்கு பல கலைகளை கற்றுக் கொள்ளும் வாய்ப்புகள் கிடைத்தன. தமிழ், மலையாளம், சமஸ்கிருத மொழிகளை நன்கு கற்று தேர்ந்தவராக இருந்தார். கூர்மையான அறிவாற்றல் படைத்த இவர் நல்ல எண்ணமும், பரந்த மனமும் உடையவராய் இருந்ததால் பலருடைய அன்பிற்கு உரியவராகவே வாழ்ந்து வந்தார்.

### அரசாங்க வேலையும், திருமணமும்

பத்மநாப புரத்தை தலைமையிடமாகக் கொண்டு திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மா ஆண்டு வந்தார். தேவசகாயம் போர் கலையில் வல்லவராக இருந்ததால் திருவிதாங்கூர் படையில் போர்வீரராக சேர்ந்தார். நாட்கள் செல்லச் செல்ல இவருடைய அறிவாற்றலைக் கண்டு, அரண்மனையின் கருவூல அதிகாரியாக திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் தேவசகாயம் பணியாற்றும்படி கூறினர். அதன்பின் பார்கவி அம்மாள் என்ற பெண்ணை திருமணம் செய்துக் கொண்டார்.

திருவிதாங்கூர் அரசின் தளபதியாகவும், போர் பயிற்சியாளராகவும் திரு. டிலனாய் என்பவர் பணிபுரிந்து வந்தார். தக்கலை அடுத்த புலியூர் குறிச்சியில் உள்ள அரண்மனையில் வீரர்களுக்கு டிலனாய் போர் பயிற்சி அளித்துக் கொண்டே, ஆயுதங்கள் உற்பத்தி செய்யும் பணிகளில் ஈடுபட்டு வந்தார். அந்த நேரத்தில் திரு. டிலனாய், தேவசகாயம் இருவரிடையே நல்ல நட்பு ஏற்பட்டது. டிலனாய் மூலம் சுவிசேஷத்தைப் பற்றியும், இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும் பற்றியும் தேவ சகாயம் நன்கு அறிந்துக் கொண்டார்.

### முதல் முயற்சி

கிறிஸ்துவின் அன்பான போதனைகள், அவருடைய வாழ்க்கை இவரை அதிகமாக தொட்டது. ஆகவே கிறிஸ்தவ நெறியில் வளர விரும்பினார். அதற்குரிய முதல் முயற்சியாக நெல்லை மாவட்டம், காவல் கிணறு பகுதியில் இருந்த தேவாலயத்திற்கு சென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்.

### கிறிஸ்துவுக்காக அரசாங்க வேலையை இழந்தார்

தன் மனைவியிடமும் கிறிஸ்துவைப் பற்றி கூறினார். நாளுக்கு நாள் கிறிஸ்தவ விசுவாசத்தில் இருவரும் வளர ஆரம்பித்தனர்.

இவர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதற்காக திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பல நெருக்கடி களுக்கு உள்ளானார். இறுதியில் அவருடைய கருவூல அதிகாரி பணியிலிருந்தும் நீக்கப்பட்டார். இருப்பினும் தேவ சகாயம் இயேசுவின் மேல் உள்ள அன்பை விட்டு விலகுவதாக இல்லை. இன்னும் அதிக உறுதியுடன் இயேசுவை நேசித்தார். கிறிஸ்துவை மறுதலிக்கும்படி பலமுறை எச்சரிக்கப் பட்டார். ஆனால் தேவசகாயம் கிறிஸ்துவை விடுவதாக இல்லை என்ற அதிக உறுதியுடன் காணப்பட்டார்.

## இயேசுவின் நாமத்தில் அவர் செய்த அதிசயங்கள்

ஒரு முறை காவலர்கள் எருமை மாட்டின் மீது அவரை உட்கார வைத்து காட்டுப்பகுதியில் நடத்திச் சென்றனர். திடீரென்று ஒரு சிங்கம் எதிர் கொண்டு வந்தது. அதைப் பார்த்து காவலர்கள் பயந்தனர். சிங்கம் நம்மை அடித்து கொன்று போடுமே என்ன செய்வது என தவித்தனர். அப்பொழுது தேவ சகாயம் சிங்கத்தைப் பார்த்து, **"இயேசுவின் நாமத்தில் உனக்கு கட்டளையிடு கிறேன், திரும்பிப் போ"** என்று சொன்னவுடன் சிங்கம் அப்படியே கீழ்ப்படிந்து அமைதலுடன் திரும்பி சென்றது.

ஒரு ஏழை மனிதன் இறந்துப்போன தன் ஆட்டை தூக்கிக் கொண்டு வந்து தேவ சகாயத்திடம் முறையிட்டான். அப்பொழுது அவர் ஜெபித்தவுடன் இறந்து போன ஆடு உயிர் பெற்றது.

இன்னொரு முறை தேவ சகாயத்தை பாம்பும், தேள்களும் நிறைந்த ஒரு அறையில் இரவு முழுவதும் அடைத்து வைத்திருந்தனர். பொழுது விடிந்து அவர் இறந்திருப்பார் என நினைத்து காவலர்கள் வந்து பார்த்தபொழுது அவர் எந்த ஆபத்துமின்றி உயிருடன் இருந்ததைக் கண்டு காவலர்கள் வியந்துநின்றனர். லூக்கா 10:19-ன்படி ஒன்றும் உங்களை சேதப்படுத்தமாட்டாது என்ற வேத வசனத்தின்படியே கர்த்தர் அவரை காப்பாற்றினார்.

## கிறிஸ்துவுக்காக ஏற்றுக் கொண்ட பாடுகள் ஏராளம்

விலங்கிடப்பட்ட நிலையில் பல மைல் தூரம் அவரை கால் நடையாகவே அழைத்துச் சென்றனர். தாகத்தில் நா வறண்டது. பசியில் கால்கள் தடுமாறின. ஆனால் அவருடைய இருதயம் மட்டும் தன் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை முழுமையாய் நம்பி இருந்தது.

தேவ சகாயம் உடல் முழுவதும் சாட்டை அடிகள், காயங்கள் பல. அந்த காயங்களில் மிளகாய் வற்றலை அரைத்து தடவினார்கள். **"ஏன் இந்த வேதனை இயேசுவை மறுதலித்து விடு உனக்கு அரண்மனையில் மீண்டும் உயர் பதவிகள் அளிக்கப்படும்"** என்று சொல்லி அவரை மாற்ற முயற்சித்தனர். ஆனால் அவர்களுடைய முயற்சிகள் தோற்றது. இயேசுவின் மேல் உள்ள விசுவாசமே ஜெயித்தது. இறுதியில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். மூன்று ஆண்டுகள் பலவிதமான கொடுமை களுக்கு உள்ளானார். சூரை முள் கொண்டு அடிக்கப்பட்டார். சொல்ல முடியாத துயரத்திற்கு ஆளானார்.

## கோதுமை மணி மண்ணில் விழுந்தது!

தொடர் சித்தரவதைகளுக்குப் பிறகு 1752 ஜனவரி 14-ம் நாள் ஆரல்வாய்மொழி காற்றாடி மலையில் உள்ள காட்டில் வைத்து போர் வீரர் களால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருடைய உடலை கோட்டாறு ஆலயத்தில் அடக்கம் செய்தனர்.

மத்தேயு 13:8-ன்படி நல்ல நிலத்தில் விழுந்த விதை நூறாக பலன் தந்தது என்ற வேத வசனத்தின்படி இன்றைய கால கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு இவருடைய வாழ்க்கை நல்ல முன் உதாரணமாக அமைகின்றது.

Tamil
Whats App No
95004 87059



# S J SAVES TRUST

# நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

அன்புள்ளம் கொண்ட சகோதர, சகோதரிகளே!

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உன்னத நாமத்தில் உங்களை அன்போடு வாழ்த்துகிறேன். கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நம்முடைய அன்பின் அறப்பணி கடந்த 44 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

எனக்கு திருமணமான நாளிலிருந்து நானும், என் மனைவியும் திக்கற்ற பிள்ளைகள், ஏழை பிள்ளைகளை நன்கு வளர்த்து, படிக்க வைத்து ஆளாக்கினோம். அதில் ஒரு சில பெண்களுக்கு திருமணமும் செய்து வைத்தோம். அந்த பணிகள் இன்று S.J.Saves Trust ஆக வளர்ந்து, நூற்றுக்கணக்கான ஏழை பிள்ளைகள், வயதான முதியவர்களை போஷித்துக் கொண்டிருக்கிறது.

- ★ நம்மிடம் படிக்கும் மாணவர்கள் 810 பேருக்கு ஜூன் மாதம் கோடை விடுமுறை காலத்தில் நல்லதொரு விருந்து (பிரியாணி, சிக்கன், பாயாசம் மற்றும் கேக் முதலியவை) கொடுக்கப்பட்டது.
- ★ ஏழை மாணவர்களுக்கு பள்ளிக்கு தேவையான நோட், பேனா, பென்சில், ரப்பர், வாட்டர் பாட்டில், டிபன் கேரியர், ஸ்கேல் ஆகியவற்றை கொடுத்தோம்.
- ★ புரோட்டின் பவுடர், சத்துடானிக், மருந்துகள், இனிப்பு மற்றும் கார வகைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டது.
- ★ கடந்த கல்வியாண்டில் படிப்பில் பின்தங்கிய நிலையில் உள்ள மாணவர்களுக்கு நமது டியூஷன் சென்டர் மூலம் சிறப்பு பயிற்சி கொடுத்த படியால் அவர்கள் நல்ல மதிப்பெண் களுடன் தேர்ச்சி பெற்றனர்.
- ★ தேர்ச்சி பெற்ற மாணவர்கள் 16 பேருக்கு சிறப்பு பரிசாக கைக் கடிகாரம் கொடுக்கப் பட்டது. பிள்ளைகள் மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டனர்.

இதற்கு உதவி செய்த வயதான தாய் ரோசன்னா அவர்களுக்காக தேவனை துதிக்கிறோம். இப்பணிகளுக்கு தொடர்ந்து உதவி செய்கிற அன்பு பங்காளர்கள் ஒவ்வொரு வருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம். புதிதாக ஒரு சில கிராமங்களில் ஒருமாத இடைவெளிக்கு பிறகு தங்களுக்கு ட்யூசன் சென்டர் வேண்டும் என்று அக்கிராமத்தில் உள்ள ஏழை தாய் தகப்பன்மார் வருந்தி கேட்டுள்ளனர். ஜுலை மாதத்தில் இருந்து 300 பிள்ளைகளுக்கு ட்யூசன் வகுப்புகள் ஆரம்பித்துள்ளோம். சின்ன மருதூர் என்னும் கிராமத்தில் உள்ள ஏழை பிள்ளைகள் புதியதாக ட்யூசனில் சேர்ந்து படித்து விருகிறார்கள்.

நம்மிடம் உதவி பெறுகிற மக்களில் சிலர் விதவைகளாகவும், பரம ஏழைகளாகவும் இருக் கிறார்கள். ஒரு குடும்பத்தை சேர்ந்த பலர் பத்து நாளில் அப்பா, அம்மா, மாமனார், மாமியார் என அனைவரும் இறந்து விட்டார்கள்.

1. ஒரு குடும்பத்தை சேர்ந்த மூன்று இளம் பெண்களின் தகப்பன் விபத்தில் இறந்து விட்டார். அவர்களின் எதிர்காலம் பெரிய கேள்விக்குறியாக உள்ளது. அவர்களுடைய வீடு பனை ஓலையைக் கொண்டே சுவராகவும், கூரையாகவும் வேயப்பட்டுள்ளது.
2. சேலம் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் கைகால் செயல்படாத, போலியோவால் பாதிக்கப்பட்ட ஒரு ஏழை தாய் மண்குடிசையில் வாழ்கிறார்கள். இவர்களுக்கு வருமானத்திற் காக ஒரு தையல் இயந்திரம் கொடுத்துள் ளோம். ஆனால் அதை வைப்பதற்குக் கூட ஒரு பாதுகாப்பான இட வசதி அவர்களுக்கு இல்லை.
3. ஒரு வீட்டில் தாய் இறந்து விட்டார்கள். தகப்பனாருக்கு கை, கால் செயல்படாது. பிள்ளையே அப்பாவிற்கு சமைத்து கொடுத்து,

அவரை பராமரித்து வருகிறாள். மழை காலத்தில் வீடு ஒழுகும். அங்கு பாம்பு அடிக்கடி வரும். நன்றாக யோசித்து பாருங்கள், யாருமில்லை, அப்பா படுத்த படுக்கை, அவரை குளிப்பாட்டுவது எல்லாம் இந்த மகள் தான் செய்யவேண்டும். படிக்க வேண்டிய காலத்தில் படிப்பை விட்டு விட்டு தன் வீட்டின் வேலையை செய்து கொண்டே நம் ட்யூசனுக்கு வந்து படிக்கிறாள். நமது சென்டர் மூலம் அந்த பெண்ணுக்கு முடிந்த அளவில் கல்வி கற்று தருகிறோம்.

- **ஏழைக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயஞ்செய்து, சிறுமைப்பட்டவனுக்கும் திக்கற்றவனுக்கும் நீதி செய்யுங்கள். பலவீனனையும் எளியவனையும் விடுவித்து... சங்.82:3-4a**
- **கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார். பலவீனனுக்கும் எளியவனுக்கும் அவர் இரங்கி, எளியவர்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பார். சங்.72:12-13**

மேலே சொன்ன மூன்று பேருக்கும், மேலும் தன் கணவரை இழந்த பெண் கீதா என்பவருக்கும் நாம் அவசரமாக பாதுகாப்பான ஒரு வீடு கட்டி தரவேண்டும். எளிய முறையில் ஒரு வீடு கட்ட இரண்டு லட்சம் முதல் மூன்று லட்சம் வரை செலவுகள் ஆகும் **(Rs.2,00,000/- to 3,00,000/-)** நான்கு வீடுகள் கட்ட மொத்தம் **Rs.10,00,000/- (Ten lakhs only)** இப்பணிகளுக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம். இந்த பணிக்கு உதவுகின்ற மக்களை தேவன் தாமே நிச்சயமாக ஆசீர்வதிப்பார்.

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act–ன்படி Sec. 80G Exemption உண்டு**

## அன்பரின் ஆறுதல் TV நிகழ்ச்சி நேரங்கள்

**நம்பிக்கை TELEVISION**

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

**ARADANA TV**
புதன், வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

**HARVEST tv**
சனி இரவு 07.30 – 08.00

## S.J. Saves Trust டியூசன் சென்டரில் படிக்கும் பிள்ளைகளில் ஒரு பகுதியினர்








## சகோதரர் அவர்கள் பிள்ளைகளுக்கு கை கடிகாரம் பரிசாக வழங்கிய காட்சி





# S.J.S.T கிராமப்புற மருத்துவமனை பணிகள்

அன்பான S.J.S.T. மருத்துவமனை பங்காளர்களே! நான் மருத்துவமனையில் பணி செய்த நாட்களிலும், கிளீனிக் வைத்து நடத்தி வந்த நாட்களிலும், அநேக வியாதியுள்ள மக்களுக்கு என்னால் இயன்ற உதவிகளை செய்துள்ளேன். கொர்நேலியு செய்த தான தர்மங்களை தேவன் தாமே நினைவு கூர்ந்து ஒரு தூதனை அனுப்பியது போல, என் வாழ்விலும் நான் இருதய பலவீனத்துடன் இருந்த பொழுது ஒரு பலத்த தூதன் என் அருகில் காட்சியளித்து, மகனே, கலங்காதே! "உன் இருதயத்தை கர்த்தர் பெலப்படுத்தி, எல்லா வியாதிகளையும் குணமாக்குவார்" என்று கூறினான். அத்துடன் என் மனைவிக்கும் (திருமதி. மார்கிரேட் ஸ்திரா) கர்த்தர் தாமே இரங்கி, கேன்ஸர் நோயிலிருந்து பூரண சுகத்தைத் தந்தார்.

நாம் எளியவர்களுக்கு செய்கிற எந்த உதவியும் மறக்கப்படுவதில்லை. சங்.41:1,2,8,3-ன்படி சிறுமைப்பட்ட மக்கள் மேல் நாம் நோக்கமாயிருந்து செய்கிற அனைத்து நற்காரியங்களையும் கர்த்தர் கண்ணோக்கி நிச்சயமாக அதற்குரிய பலனை இம்மையிலும், மறுமையிலும் நிறைவாகத் தருவார். நம்முடைய எல்லா தீராத வியாதிகளையும், பிரச்சனைகளையும் நீக்குவார்.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் **Ultra Sound Scan** வாங்கி விட்டோம். இதற்கு உதவி செய்த மருத்துவர்கள், ஊழியப் பங்காளர்கள் அனைவருக்கும் எங்களது நன்றியை தெரிவிக்கிறோம். இன்னும் நமது மருத்துவமனையில் ஒரு தியேட்டர் கட்டப்படவும், **R.O. Plant** மற்றும் குழந்தை களுக்கான வார்டு கட்டவும் வேண்டும். இதற்கு உங்கள் மேலான ஜெபமும், உதவியும் தேவை. இதன் தேவை மொத்தம் **Rs.1,50,00,000/-** (ஒன்றரை கோடி ரூபாய்) ஆகும்.

ஜெபியுங்கள்! தாங்குங்கள்!


**உடனடி தேவை**

* Adobe Premiere Pro–வில் எடிட்டிங் செய்யத்தெரிந்த Video Editors.
* வேதாகமம் தெரிந்த, பட்டப்படிப்பு முடித்த ஆங்கிலம் & தமிழ் தட்டச்சு பயின்றவர்கள்.
* பட்டப்படிப்பு முடித்த கம்ப்யூட்டர் நன்கு தெரிந்த Data Entry Operators
* அனுபவமுள்ள ஓட்டுனர்கள் (SUV)
* சமையல் செய்பவர்கள்
* தூய்மைப் பணியாளர் (பெண்கள் மட்டும்)

கிறிஸ்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்




தகுந்த ஊதியம் வழங்கப்படும்

**Apply to: info@mojindia.org**

நேரிலோ அல்லது E.Mail மூலமாகவோ உங்களுடைய Resume & Certificate Copy – ஐ அனுப்பி வைக்கவும்

# WORLD NEWS உலகச் செய்திகள்

✣ உலக அளவில் ஏராளமானோர் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். உயிர்க்கொல்லி நோயான இதைக் குணப்படுத்த தற்போது ஒரு சில சிகிச்சை முறைகள் மருந்து மட்டுமே நடைமுறையில் உள்ளன. ஆனால், புற்றுநோய் பாதித்தால், அதை 100 சதவிகிதம் குணப்படுத்த முடியும் என்று முழுமையாகச் சொல்ல முடியாது.

✣ நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தி, அதன் வளர்ச்சியைக் குறைப்பது மட்டுமே இப்போதுள்ள சிகிச்சை முறையில் பின்பற்றப்படுகிறது. இதைத் தொடர்ந்து புற்றுநோயை முற்றிலும் குணப்படுத்தும் வகையில் மருந்துகள் கண்டுபிடிக்கும் முயற்சியில் மருத்துவ நிபுணர்கள் தீவிர ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்றனர்.

✣ இந்நிலையில் இஸ்ரேலைச் சேர்ந்த ஆக்சலரேடட் எவால்யூஷன் பயோடெக்னாலஜிஸ் லிமிட்டெட் (Accelerated Evolution Biotechnologies Ltd) என்ற நிறுவனத்தை சேர்ந்த மருத்துவக் குழுவினர் தற்போது புதிய மருந்து கண்டு பிடித்துள்ளனர். இது புற்று நோயை முற்றிலும் குணப்படுத்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

✣ புற்று நோய் செல்களை முற்றிலும் அழிக்கும் வகையில் இந்த மருந்து மூன்று கட்டங்களாகச் செயல்படும். இதற்கு மியூடட்டோ சிகிச்சை (Multi Target Toxin Treatment) என்று பெயர். உடலில் புற்று நோய் பாதித்த பகுதிகளைச் சென்றடையும் இந்த மருந்து தனது பணியைச் செய்யும். அப்போது பிறபகுதிகளுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாது.

✣ அதனால் புற்றுநோய் 100 சதவிகிதம் குணமாகும். வேறு சிகிச்சைகள் பலனளிக்காவிட்டால் இந்தச் சிகிச்சையை எடுத்துக் கொள்ளலாம். இதற்கான காப்புரிமையைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். அடுத்தஆண்டு இந்த மருந்து விற்பனைக்கு வரும். அதன் பிறகு புற்றுநோய் பாதிப்பே இருக்காது. அதுவரை இந்த உலகம் காத்திருக்க வேண்டும் என்கிறார் இந்தநிறுவனத்தின் தலைமை அதிகாரி டாகடர் மொரட்.

»---------------------------------------------«

✣ தேசிய வெளிநாட்டு உதவித் தொகையை மத்திய அரசு திட்டத்தின் கீழ் பழங்குடியினர், சீர்மரபினர், நாடோடி இனத்தவர், பகுதியளவு நாடோடி இனத்தவர், நிலமற்ற விவசாய தொழிலாளர்கள் மற்றும் பாரம்பரிய கைவினைஞர்கள் ஆகிய பிரிவினர் பயன்பெறலாம்.




### படிப்புகள்

இந்த உதவித் தொகை திட்டத்தின் கீழ் வெளிநாட்டு கல்வி நிறுவனங்களில் முதுநிலை பட்டப் படிப்பு அல்லது ஆராய்ச்சி படிப்புகளை மேற்கொள்ள உதவித் தொகை வழங்கப்படுகிறது. அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் அல்லது பல்கலைக்கழகங்களில் எந்த ஒரு துறையிலும் உயர்நிலை படிப்புகளை மேற்கொள்ளலாம்.

உதவித்தொகை எண்ணிக்கை எஸ். டீ.பிரிவினர் - 115, சீர்மரபினர், நாடோடி இனத்தவர், பகுதியளவு நாடோடி இனத்தவர் 6, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பாரம்பரிய கைவினைஞர்கள் - 4 என மொத்தம் 125 பேருக்கு ஒவ்வொரு ஆண்டும் நிதியுதவி வழங்கப்படுகிறது. இவற்றில் 30 சதவீத இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப் படுகிறது. போதுமான மாணவியர் விண்ணப்பிக்காத பட்சத்தில், பயன்படுத்தப்படாத இடங்கள் தகுதியுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும்.

### தகுதிகள்

பிஎச்.டி., படிப்புகளுக்கு முதுநிலை பட்டப் படிப்பும் முதுநிலை பட்டப் படிப்புகளுக்கு இளநிலை பட்டப் படிப்பும் அவசியம். குறைந்தபட்சம் 60 சதவீத மதிப்பெண்கள் அல்லது உரிய தகுதித் தேர்வில் சமமான மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு ஏப்ரல் முதல் தேதியின்படி 35 ஆண்டுகளுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். வருமான வரம்பு : அனைத்து வகைகளிலும் ஒட்டு மொத்த குடும்ப வருமானம் ஆண்டுக்கு 8 லட்சம் ரூபாய்க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

### நிதி உதவி விபரம்

எந்த நாட்டில் உள்ள கல்வி நிறுவனமாக இருந்தாலும் தேர்வு செய்யப்படும் மாணவ, மாணவி யருக்கு கல்விக் கட்டணம், விமானக் கட்டணம், விசா கட்டணம், மருத்துவ காப்பீடு ஆகியவை வழங்கப் படுகின்றன. இவை தவிர நாடுகளுக்கு ஏற்ப இதர செல வினங்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

## தீராத வியாதியா! வாழ்க்கையில் போராட்டமா!!
## ஆசீர்வாதமே இல்லையா?

கவலையே வேண்டாம்
உங்களுக்கு உதவி செய்ய
உங்களை கை தூக்கிவிட...
கர்த்தர் ஒரு அதிசயம் செய்வார்.

நேரம் :
காலை 9.00 மணி முதல்
2.00 மணி வரை

# அற்புத குடும்ப ஆசீர்வாத ஜெபம்

**27 ஆகஸ்ட்**
சனிக்கிழமை

இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்,
10வது குறுக்குத்தெரு, மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி - 18.

தேவ செய்தி
**Dr. ஆனந்த ஸ்திரா & குடும்பத்தினர்**
தொடர்புக்கு : (0431 – 2765386, 2741925) 94888 45627

---

## கன்னியாகுமரி மாவட்டம் மூலசெல்லில்
# அற்புதத்தின் மாலை

**ஆகஸ்ட் 14**
ஞாயிற்றுக் கிழமை

இடம்: ஹேக்கர் மெமோரியல் சர்ச்,
மூலச்சல், கன்னியாகுமரி மாவட்டம்.
நேரம் : மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

தேவ செய்தி: **Dr. ஆனந்த ஸ்திரா**
**Mrs. மார்கிரேட் ஸ்திரா**
தொடர்புக்கு : (0431 – 2765386, 94888 45627 & 82203 17472

---

dranandastira@mojindia.org, margret@mojindia.org,
joshua@mojindia.org, jane@mojindia.org,
info@mojindia.org

**Telugu Whats App No: 91770 87860**



குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்
ஒட்டன் சத்திரம்
திருப்பூரில்
ஆகஸ்ட் 6
சனிக்கிழமை
நேரம் : மாலை 5 மணி முதல்
இரவு 9.00 மணி வரை
இடம் : SAM யூசுப் முகமது ராவுத்தர்
திருமண மண்டபம்,
ஆலய பின்புறம், தாராபுரம் ரோடு,
ஒட்டன்சத்திரம்.
ஆகஸ்ட் 7
ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 5 மணி முதல்
இரவு 9.00 மணி வரை
இடம் : TELC அருள்நாதர் ஆலயம்
கோர்ட் வீதி, சபாபதிபுரம்,
திருப்பூர்.
தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா
தொடர்புக்கு
0431 – 2741925,
95663 83350 & 63811 41139
தொடர்புக்கு
0431 – 2741925,
95663 83350 & 95979 75157




தூத்துக்குடியில்
குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்
ஆகஸ்ட் 13
சனிக்கிழமை
இடம் : ASKR திருமண மண்டபம்
சண்முகாபுரம், தூத்துக்குடி.
நேரம் : காலை 9.00 மணி முதல்
மதியம் 1.00 மணி வரை
தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா
Mrs. மார்கிரேட் ஸ்திரா
தொடர்புக்கு : 0431 – 2741925, 95663 83350 & 81452 37037




உங்கள் அன்பு சகோதரி Dr. ஜேன் ஜாஷ்வா
விருதுநகர் வருகை தருகிறார்கள்
நேரம் : 7.00 am (முதல் ஆராதனை)
8.30 am (2-வது ஆராதனை)
இடம்
C.S.I. St. John's Church விருதுநகர்.
ஆகஸ்ட்
21
ஞாயிற்றுக்கிழமை

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

## பங்காளர்களுக்கான ஆசீர்வாதக் கூட்டம்



**சென்னையில்**

நாள் : ஆகஸ்டு 9
செவ்வாய் (அரசு விடுமுறை)
நேரம் : காலை 9.30 – மதியம் 1.00
இடம் : J.J.மஹால்
L.K.S. தங்க மாளிகைக்கு எதிரில்,
G.S.T. மெயின் ரோடு,
கடப்பேரி, மேற்கு தாம்பரம், சென்னை.

தொடர்புக்கு :
94888 45627,
80987 42638

**திருநெல்வேலியில்**

நாள் : ஆகஸ்டு 19
வெள்ளி (அரசு விடுமுறை)
நேரம் : காலை 9.30 – மதியம் 1.00
இடம் : ஐயம்பெருமாள் AC ஹால்
வ.உ.சி. மைதானம் பின்புறம்,
(பாளையங்கோட்டை நகர கூட்டுறவு வங்கி அருகில்)
பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

தேவ செய்தியாளர்கள்
Rev.Dr. A. ஜாஷ்வா
Dr. ஜேன் ஜாஷ்வா

## நாகர்கோவில் குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

இடம் : விஜயதா திருமணமண்டபம்
W.C.C. ரோடு, நாகர்கோவில்.
நேரம்: காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

ஆகஸ்ட் 15
(திங்கட்கிழமை அரசு விடுமுறை)



தேவ செய்தி
Dr.ஆனந்த ஸ்திரா
Mrs.மார்கிரேட் ஸ்திரா

தொடர்புக்கு :
செல்: 0431 - 2765386, 82203 17472

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:8 இதழ்:8 ஆகஸ்ட் 2022 தனிபிரதி- ரு.20/- ஆண்டு சந்தா- ரு.200/-
VOL: 8 ISSUE NO : 8 August 2022 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-

..பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும்
செய்யப்படாத அதிசயங்களை
உன் ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும் செய்வேன்..

யாத்திராகமம் 34:10

